செ.வெ.எண்: நாள்:12.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்திய கிராமங்களை பாராட்டி, ஊராட்சி தலைவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.**

-----

கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் உலக நாடுகளை அச்சுறுத்தி வந்த நிலையில், தற்போது இந்தியாவிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய சூழலில் தன்னையும், தனது குடும்பத்தாரையும் பாதுகாத்துக்கொள்ள இயலாமல், விடியலை நோக்கி காத்துக்கொண்டிருந்த மக்களை கொரோனா நோய்த்தொற்றிலிருந்து காத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று கொண்டது முதல் தொடர்ந்து பல்வேறு மருத்துவ உபகரணங்கள், மருத்துவ வசதிகள், ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய கூடுதல் படுக்கை வசதிகள், கொரோனா தடுப்பூசிகள் மற்றும் வெளிநாடுகள், வெளிமாநிலங்களிலிருந்து உடனுக்குடன் ஆக்சிஜன் கொண்டு வந்து மருத்துவமனைகளுக்கு சேர்த்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

மேலும், தமிழ்நாடு அரசு கொரோனா நோய்த்தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, தளர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்த சூழலில் நம்மையும், நம் குடும்பத்தாரையும் பாதுக்கொள்ள அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என அரசால் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக பொதுமக்களும் விழிப்புணர்வு பெற்று, தடுப்பூசி செலுத்திக்கொள்ள அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில் நாமக்கல் மாவட்டத்தில் 100 சதவிகித தடுப்பூசியானது, கொல்லிமலை வட்டத்திற்குட்பட்ட பைல்நாடு பகுதியில் 319 நபர்களுக்கும், இராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட ஆயிபாளையத்தில் 580 நபர்களுக்கும், பரமத்தி வட்டத்திற்குட்பட்ட குண்ணமலையில் 524 நபர்களுக்கும், இருட்டணையில் 696 நபர்களுக்கும், கபிலர்மலை வட்டத்திற்குட்பட்ட டி.கவுண்டம்பாளையத்தில் 396 நபர்களுக்கும், நாமக்கல் வட்டத்திற்குட்பட்ட மரூர்பட்டியில் 253 நபர்களுக்கும், சிவியம்பாளையத்தில் 514 நபர்களுக்கும், திருச்செங்கோடு வட்டத்திற்குட்பட்ட தொ.கவுண்டம்பாளையத்தில் 314 நபர்களுக்கும், சிக்கநாயக்கன்பாளையத்தில் 331 நபர்களுக்கும், மல்லசமுத்திரம் வட்டத்திற்குட்பட்ட பல்லக்குழியில் 744

நபர்களுக்கும், வெண்ணந்தூர் வட்டத்திற்குட்பட்ட பழந்தின்னிப்பட்டிபுதூரில் 136 நபர்களுக்கும், மின்னக்கலில் 510 நபர்களுக்கும், எலச்சிபாளையம் வட்டத்தில் போக்கம்பாளையத்தில் 275 நபர்களுக்கும், புதூரில் 364 நபர்களுக்கும் என மக்கள் தொகையில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தி கொரோனா நோய்த்தொற்றிலிருந்து தங்களையும் காத்துக்கொண்டு, பிறருக்கும் தொற்று பரவாத வகையில் பாதுகாப்பை உறுதி செய்துள்ளார்கள்.

**இன்று (12.08.2021) பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்திய கிராமங்களை பாராட்டி ஊராட்சி தலைவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.**

இந்த நிகழ்ச்சியின் போது இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் (பொ) மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.எஸ்.சோமசுந்தரம் உட்பட மருத்துவத்துறை அலுவலர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.